# பெறுகை அறிவித்தல்

# கஹட்டகஹ கிரபைட் லங்கா லிமிடட்

## (கைத்தொழில் அமைச்சு) - இலங்கை

## குருநாகல் மாவட்டத்திலுள்ள மதுராகொட கஹட்டகஹ சுரங்க வேலைத் தளத்தில் புத்தம் புதிய FORTH FLOTATION (Capacity 1TPH) பொறித்தொகுதியின் தயாரிப்பு, வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்தலுக்கான பெறுகை

1. இலங்கை, குருநாகல் மாவட்டத்திலுள்ள மதுராகொடவிலுள்ள கஹட்டகஹ கிரபைட் சுரங்க செயலாக்கல் பிரிவிற்கு புத்தம் புதிய FORTH FLOTATION (1TPH) பொறித்தொகுதியை தயாரித்தல், வழங்குதல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தலுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கஹட்டகஹ கிரபைட் லங்கா லிமிடெட் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.
2. விலைக்கோரல்கள் சர்வதேச போட்டி ரீதியிலான விலைக்கோரலின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும். சர்வதேச வழங்குநர்களின் உள்நாட்டு முகவர்கள் உற்பத்தியாளர்களின் அங்கீகாரக் கடிதத்தை விலைக்கோரல் ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2023 ஜுன் 14ஆம் திகதி வரையில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 03.00 மணி வரையில் மீளளிக்கப்படாத கட்டணமாக 32,850.00 ரூபா அல்லது 100 அமெரிக்க டொலர்கள் (100 USD) தொகையைச் செலுத்துவதன் பேரில் இலங்கை, கொழும்பு 05, 561/3, எல்விட்டிகல மாவத்தை, கஹட்டகஹ கிரபைட் லங்கா லிமிடெட், தலைவருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்து முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
4. இங்கு குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் விநியோகக் கட்டணம் மற்றும் விலைக்கோரல் ஆவணக் கட்டணம் என்பவற்றின் மொத்தத் தொகைக்கு கஹட்டகஹ கிரபைட் லங்கா லிமிடெட்டின் பெயருக்கு வங்கி வரைவொன்றுடன் மேற்கூறப்பட்ட முகவரிக்கு வேண்டுகோள் கடிதமொன்றையும் அனுப்புவதன் பேரில் விலைக்கோரல் ஆவணங்கள் விநியோகிக்கப்படும். உள்நாட்டு விநியோகக் கட்டணமாக 19,750.00 ரூபா அல்லது வெளிநாட்டு விநியோகக் கட்டணமாக 60 அமெரிக்க டொலர்கள் (60 USD) செலுத்துமாறு வேண்டப்படுகின்றது.
5. விண்ணப்பதாரர்களினால் மேற்கூறப்பட்ட முகவரிக்கு கூரியர் மூலமாக விலைமனுக்களை அனுப்புதல் வேண்டும். காணாமல் போன மற்றும் பிந்திய ஒப்படைப்புக்கு பொறுப்புகூறப்பட மாட்டாது.
6. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2023 ஜுன் 14ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் கூரியர் சேவை மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது பின்வரும் முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 2023 ஜுன் 14ஆம் திகதி பி.ப. 02.00 மணிக்கு பின்வரும் முகவரியில் சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைக்கோரல்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். சகல விலைமனுக்களுடனும் கஹட்டகஹ கிரபைட் லிமிடட் பெயரில் வரையப்பட்ட 328,550 ரூபாவுக்கான வங்கி வரைவு அல்லது 1000 அமெரிக்க டொலர் (1000 USD) தொகைக்கான விலைமனு ஆவணத்தில் (BDS) தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரமான மீளளிக்கப்படும் விலைக்கோரல் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள் பெறுகைக் குழு,**
**கஹட்டகஹ கிரபைட் லங்கா லிமிடட்,**
**561/3, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 05.**
**இலங்கை.**

**தொலைபேசி : +94 112368736/ +94-742024747**
**தொலைநகல் : +94 112058062 மின்னஞ்சல். kgll@sltnet.lk**